**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.611/2022 P.W.8**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பழனியப்பன் | த–பெ | சந்திரன் |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம்: | |
| வயது: | : | 44/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கோழிக்கடையில் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2025**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் கோட்டையூரில் வசித்து கோழிக்கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 21.12.2016 அன்று நானும் எனது மைத்துனர் பழனி என்பவரும் வேலை முடித்து விட்டு வீட்டிற்கு காலை 10.00 மணியளவில் சென்று கொண்டிருந்தோம். அழகப்பா கல்லூரி சிலை அருகே போலீசார் வாகன தனிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள். அப்பொழுது இரண்டு நபர்கள் வேகமாக பல்சர் வாகனத்தில் அங்கு வந்தார்கள் அவர்களை பிடித்து போலீசார் விசாரணை செய்ததில் இருவரும் எவ்வித தூன்டுதலும் இன்றி தன்னிச்சையாக செயினை பறித்து சென்ற குற்ற நடவடிக்கைகள் குறித்து எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் இந்த வழக்கின் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.5.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றை தினம் வழக்கு சொத்தை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் கைப்பற்றினார். அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.6**. இந்த வழக்கு சம்மமந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கோழிக்கடையில் வேலை பார்க்கிறேன் அன்றைய தினம் எனக்கு தெரிந்த நண்பர் வீரப்பன் என்பவருடன் சித்தால் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். பொதுவாக சித்தால் வேலைக்கு போனால் காலை 7.00 மணிக்கு சென்று மதியம் 3.00 மணிக்கு வருவது வழக்கம் ஆனால் அன்றைய தினம் சாப்பிடுவதற்காக காலை 10.00 மணிக்கு வீட்டிற்கு வந்தேன். நான் கையெழுத்து செய்த ஆவணம் வெள்ளை பேப்பர் என்றால் சரிதான். நான் அத்தாட்சி ஆவணத்தில் கையெழுத்து செய்த போது நான் அங்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.25 17:31:25 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி